ஊவா மாகாண சபை – 2024 ஆம் ஆண்டு

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

- எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்க 8 இன் பிரகாரம் எதிர்பாராத பொறுப்பு வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் ஊவா மாகாண சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த விசாரிக்கப்பட்டு வரும் 02 வழக்குகள் தொடர்பாக ரூபா 2,300,000 ஆன எதிர்பாரா பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில்	குறித்த வழக்குகள் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருவதால் பொறுப்பின் அளவினை தீர்மானிக்க முடியாமையால் கணக்குகளில் வெளிப்படுத்தலின் கீழ் காண்பிக்கப்படவில்லை என்பதாக	மாகாண சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. .		
(ஆ)	ஊவா மாகாண சபை நிதி விதி 510.2 (ஆ) 06 வணிக முற்பண கணக்குகளுக்குரிய மீளாய்வாண்டில் உடைக்கப் பட்ட மொத்தம் ரூபா 91,896,715 ஆன மிகை மாகாண சபை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அவ்வாறு செலவு வைக்கப்படாததன் காரணமாக வணிக முற்பண கணக்கில் ஆகக்கூடிய வரவு மீதிகள் எல்லை மிகைதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	அனைத்து வருமானங்களும் காசு அடிப்படையில் மாத்திரம் கணக்கீடு செய்யப்படுவதுடன் வணிக முற்பணக கணக்குகளில் வருடாந்த இலாப நட்டங்கள் குறிப்புகளின் கீழ் மாற்றல்கள் மாத்திரம் வெளிப்படுத்தப்படுவதால் வருமான அனுப்புகை சந்தர்ப்பங்களில் வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதாக.	மாகாண சபை நிதி விதி 510.2(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	ஊவா மாகாண சபை நிதி விதி 509.1 ,ன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் வருடாந்த பெறுமான தேய்வு அளவினை , பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 6 வணிக முற்பணக் கணக்குகளுக்குரிய மீளாய்வாண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு ரூபா 11,318,361 தொகை மாகாண சபை பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை அவ்வாறே, 04 வணிக முற்பணக் கணக்குகளுக்குரிய முன்னைய ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 17,276,404 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை.	2024 ஆம் ஆண்டுக்குரியதாக இந்த பெறுமானத்தெய்வு ஒதுக்கீட்டு பெறுமதி ஆண்டின் கணக்குகளை தயாரித்ததன் பின்னர் 2025 ஆம் ஆண்டின் போது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் உரிய ஆண்டின் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு அதற்கு பின்னைய ஆண்டின் போது அனுப்பி வைக்கப்பட்டதாக மற்றும் மாகாண பொறியிய லாளர் அலுவலகத்தின் பெறுமானத்தின் பெறுமதி, பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படாதிருந்ததுடன் போதியளவு பணம் கிடைத்தவுடன் பெறுமானத் தேய்வு பெறுமதியை பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	மாகாண சபை நிதி விதி 509.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	ஊவா மாகாண சபையின் 06 வணிக முற்பண கணக்கு களுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி யில் காணப்பட்ட காணப்பட்ட ரூபாய் 448,039,390 ஆன நடைமுறை சொத்துக்கள் ரூபா 9,576,610 ஆன நடைமுறை பொறுப்புகள் மற்றும் ரூபா 10,000,000 ஆன நிலையான வைப்பு மீதிகள் ஊவா மாகாண சபையின் திரட்டிய நிதிக் கூற்றுகளில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	குறித்த வணிக முற்பணக் கணக்குகளுக்காக வேறாக கணக்கு காணப்படுவதால் அத்தகவல்கள் திரட்டிய கணக்குகளில் வெளிப்படுத்தப் படவில்லை என்பதாக.	அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(உ)	மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட திரட்டிய நிதி கூற்றுகளில் காண்பிக்கப் பட்டிருந்த செலுத்த வேண்டிய / அட்டுறு செலவினம் மற்றும் மாகான சபையின் 06 நிறுவனங்களுக்குரிய ஒதுக்கீட்டு கணக்கின் பொறுப்பு கூற்றினுள் காண்பிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் மீதிகளுக்கு இடையே ரூபா 29,206,905 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது.	03 நிறுவனங்களின் திரட்டிய நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி சரியானதாகவும் ஏனைய நிறுவனங்களின் கீழ் பதிவு செய்யும் தவறுகள் காணப்படு வதால் எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக.	கணக்கு மீதிகளுக்காக சரியான பெறுமதி நீதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தனது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்பத்தப்பட்டது.

1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.5.1 தலைப்பு 702 – ஊவா மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண நிதி விதி 371.2.2	பிரதான செயலாளரின் முன் அங்கீகாரம் இன்றி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வழங்கக்கூடிய ஆகக்கூடிய தொகையை மிகைத்து 04 சந்தர்ப்பங்களில் ரூபா 300,000 முதல் ரூபா 1,600,000 வரை செயல் நிமிர்த்த கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் மீண்டும் முற்பணத்தை பெற்றுக் கொள்ளும் போது தேவையான ஆலோசனைகளை பின்பற்றுவதாக	ஊவா மாகாண நிதி விதி 371.2.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.2 தலைப்பு 704 – ஊவா மாகாண பிரதான அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், கல்வி , உள்ளூராட்சிமன்ற, மின்சக்தி எரிசக்தி, நிர்மாணம் மற்றும் கிராமிய உட்கட்மைப்ப வசதிகள் மற்றும் காணி தொடர்பான அமைச்ச

(அ) செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

தாமதமான செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவில் திக்வெல்லவத்தகந கீழ் பகுதி ஸ்ரீ சண்முகா ஆனந்த பாடசாலைக்கு அருகில் தோட்ட தொழிலாளர் வீடுகளுக்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,250,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அச்செயற் திட்டம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை	கருத்து தெரிவித்திருக்கவில்லை.	நிதி ஏற்பாடுகளை உரிய காலப்பகுதியில் பயன்படுத்த் வேண்டும்.

(ஆ) எதிர்பார்த்த பெறுபேறுகளை (Out Come) பெற்றுக் கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியின் கீழ் இரண்டாம் நிலைக் கல்வி தரப்படுத்தலை மேம்படுத்துவதற்காக இரண்டாம் கல்வி துறை அபிவிருத்தி திட்டத்தின் (SESIP) கீழ் புத்தாக்க இயலுமையை அதிகரிக்கும் நோக்கில் புத்தாக்க ஆய்வுகூடங்களை அமைப்ப தற்காக தேவையான நிலையான சொத்துக்கள் தன்மையிலான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டின் போது பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 500,000 வீதம் பாடசாலை அடிப்படையாக மானியங்களில் மொத்தம் ரூபா 1,365,372 தொகையான மானியங்கள் 07 பாடசாலைகளினால் கல்வி அமைச்சு செயலாளரின் 2021 திசெம்பர் 23 ஆம் திகதிய 20/2021 சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தாமல் பாடசாலை அபிவிருத்தி சங்கக கணக்கில் விளைவற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	இபயன்பாடு தொடர்பாக முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ளப்பட்டு வருவதாக	எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள நிதிஏற்பாட்டை பயன்படுத்த வேண்டும்.

1.5.3 தலைப்பு – 706 விவசாயம், நீர்ப்பாசம், கால்நடை உற்பத்தி, நன்னீர் மீன்பிடி அலுவல்கள் அமைச்சு

முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விதை உருளைக் கிழங்கு விசேட முற்பணக் கணக்கின் நிலுவை கடன் மீதி ரூபா 7,941,153 ஆக இருந்ததுடன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாகாண சபை நிதிக் கூற்றுக்களில் சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் கடன் தவணை முறையாக அறவிடப்படாதிருந்தமை கடந்த ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் அறவீட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.	கடன் மீதி சிறிய அளவில் அறவிடப்பட்டு வருவதாகவும் முறையாக பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக.	கடன் மீதியை உரிய காலத்தில் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.4 தலைப்பு – 708 விவசாயம், நீர்ப்பாசம், கால்நடை உற்பத்தி, நன்னீர் மீன் பிடி நடவடிக்கைகள் அமைச்சு

எதிர்பார்த்த பெறுபேறுகளை (Out Come) பெற்றுக் கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண சபை வீதி அபிவிருத்தி வீடமைப்பு வசதிகள் மற்றும் கூட்டுறவு அலுவல்கள் தொடர்பான அமைச்சு மற்றும் ஊவா மாகாண கூட்டுறவு திணைக்களம் என்பன ஒன்றிணைந்து மொனறாகலை கந்துரட்ட பலநோக்கு சேவை கூட்டுறவு சங்கத்திற்குரிய காணி ஒன்றில் ரூபா 8,148,264 தொகையொன்று செலவிடப்பட்டு 2011 ஆம் ஆண்டில் வெல்லஸ்ஸ அரிசி தயாரிக்கும் ஆலையொன்று ஆரம்பித்திருந்த போதும் 2018 ஆம் ஆண்டு அளவில் அது மூடப்பட்டு விளைவற்று காணப்பட்டது அவ்வாறு கூட்டுறவு திணைக்களத்தினால் ,ச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 5,065,000 ஆன கடன் தொகை ஒன்று தலைவர், வ.ப மொனறாகலை பல் நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கி அது ஓராண்டு சலுகை காலத்தின் பின்னர் 60 தவணைகளில் அரவிடுவதற்கு(05 ஆண்டுகளில்) உடன் படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் இதுவரை அந்த உடன்படிக்கை காலம் முடிவடைந்து இருந்த போதும் அத்தொகையில் ஒரு தவணை ஏதும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	வ.ப மொனறாகல கந்துகர பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் அரிசி தயாரிக்கும் நிலையம் ஒன்றை அப்போது மதிப்பிடப்பட்ட ரூபா 5,065,000 தொகை கொடுப்பனவிற்காக ஓராண்டு சலுகை காலத்தின் பின்னர் 60 தவணைகளில் கொடுப்பனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட போதும் காணப்பட்ட நட்ட நிலைமை காரணமாக தவணைத்தொகை செலுத்தப்படாமல் இருந்தத்துடன் இதற்குரிய தற்போதைய ஆவணங்கள் விலை மதிப்பீட்டுத திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தால் மதிப்பீட்டு பெறமதியை பெற்றுக் கொண்டதன் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக	சொத்துக்களை விளைவற்ற வகையில் வைத்திருக்கக் கூடாது

1.5.5 தலைப்பு – 709 பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணியும் பயிற்சியும்) அலுவலகம்

பதவியணி நிருவாகம்

(அ) மாகாண சபை அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள்

(பாடசாலைகள் மற்றும் சுகாதார ஆளணியை தவிர்த்து)

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதியில் ஏனைய (அமைய/தற்காலிக/ஒப்பந்த/அடிப்படை) 185 ஊழியர்களும் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சிரேஷ்ட மூன்றாம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 715 ஆகும்.	கருத்து தெரிவிக்வில்லை.	பதவியணியினை சமப்படுத்தி பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்:டும்.

(ஆ) பாடசாலை ஆளணியினர்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதியில் ஆசிரியர் உதவி பதவியனருக்காக 1498 நபர்களும் ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) 06 ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர. அதிபர் சேவையில் 219 பதவிகளும் ஆசிரியர் சேவையில் 2766 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1153 அதிபர்கள் அங்கீகரிக்கப் பட்டுள்ளதுடன் அது இதுவரை 1009 அளவில் சேவை ஈடுபடுத்தப் பட்டுள்ளதுடன் 144 வெற்றிடமாக காணப்படுகின்றன. 19,226 ஆசிரியர்கள் அங்கீக ரிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரை 16,521 அளவு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் 2705 வெற்றிடங்களாக காணப்படுகின்றன உதவி பதவியணியின் கீழ் எடுக்கப்படும் (PL தொகுதிக்குரிய) பாடசாலை அலுவலக உதவியாளர் நூலக உதவியாளர், ஆய்வுகூட உதவியாளர் பாடசாலை தொழிலாளி, காவலாளி என 2478	பதவியணியினரை சமமாகப் பேணுதல் வேண்டும்.

அனைத்து உத்தியோகத்தர் என அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் தற்போது இப்பதவி களுக்கு சேவையில் ஈடுபட்டுள்ள அளவானது 2481 ஆன அளவொன்றாக மாத்திரம் இருந்தது. அதன் பிரகாரம் அப்பதவிகளுக்குரிய 03 உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்படுவ துடன் பாடசாலை செயற்பாட்டு அலுவலர் பதவிக்கு 784 பேர் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் 381 பேர் மாத்திரம் வேையில் ஈடுபட்டிருந்தனர் அப்பதவில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 403 ஆக இருந்தன. ஏனைய அனைத்து பதவிகளிலும் மிகைகள் காணப்பட்டன. MN தொகுதிக்குரிய ஆய்வுக்கூட உதவியாளர் பதவிகளுக்காக 109 பேர் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 37 பேர் அளவில் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன் அதில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 72 ஆகும். இதற்கு மேலதிகமாக பாடசாலைகளுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் பதவியணி அறிக்கை மூலம் அங்கீகரிக்கப்படவில்லை ஒட்டுமொத்தமாக ஆரம்ப பதவிகளில் மிகை ஒன்று காணப்படுவதுடன் இதற்காக சில பதவிகளில் சில உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட வகையில் அங்கீகாரம் பெற்றுக் கொண்டமை இதற்கான காரணமாக இருந்தது.

(இ) சுகாதார பதவியணியினர்

கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
சுகாதார பதவியணியில் ஏனைய (அமைய/தற்காலிக/ஒப்பந்த/அடிப்படை) ஊழியர் ஒருவர் மிகையாகவும் சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 561 ஆகக் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிதி மற்றும் பொருளாதார கொள்கை அமைச்சின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 01/2020 மற்றும் நிதி அமைச்சர் செயலாளரின் 2019 நவம்பர் 20 ஆம் திகதிய DMS/Policy/Recruitments ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அனைத்து ஆட்சேர்ப்பும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதால் சிரேஷ் நிலை, மூன்றாம் நிலை இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப தரங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது ஊவா மாகாணம' புவி அமைப்பு வேறுபாட்டுடன் சுடிய சில சுகாதார நிறுவனங்கள் கஷ்ட பிரதேசங்களிலும் மற்றும் பொதுப் போக்குவரத்து சேவைகள் இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ளது எனினும் நோய் உதவி சேவைகளில் ஒழுங்காக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் சேவை தேவைபாட்டின் அடிப்படையில் அத்தியாவசிய வெற்றிட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வரிசை சுகாதார அமைச்சு ஊவா மாகாண சுகாதார	பதவியணியணி முகாமைத்துவவம் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

	அமைச்சு மற்றும் ஊவா மாகாண அரசு சேவைகள் ஆணைக்குழு இடமிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது	

1.5.6 தலைப்பு 710 - சுகாதார சேவைத் திணைக்களம்

விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாட்டிலான சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கொள்வனம் செய்யப்பட்டிருந்த ரூபா 1,104,564 பெறுமதியான Card Printers மற்றும் Barcode Readers எதிர்பார்த்த ஈடுபடுத்தாமல் நோக்கங்களுக்காக ஈடுபடுத்தாமல் வைத்தியசாலை களஞ்சியத்தில் நீண்ட காலமாக பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமலும் குறை பயன்பாட்டு நிலைமையிலும் காணப்படுவது அவதானிக்கப்பட்டன	வரிசை அமைச்சினால் வெவ்வேறு செயற்திட்டங்களின் கீழ் வைத்தியசாலை வலையமைப்பு செய்யும் நோக்கில் Card Printers மற்றும் Barcode Readers வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இதுவரை தியத்தலாவ ஆதார வைத்தியசாலையை கேந்திரமாக கொண்டு அட்டைகளை வலையமைப்பிற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் இந்த வலயமைப்பிற்காக வெளிமட ஆதார வைத்திய சாலை, மஹியங்கன ஆதார வைத்தியசாலை பண்டாரவலை மாவட்ட வைத்தியசாலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்வதற்காக தேவையான பௌதீக வளங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	இனங்காணப்பட்ட தேவைப்பாடு களுக்காக மாத்திரம் நிதி ஏற்பாடுகளை ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன் சொத்துக்கள் விளைவற்ற வகையில் வைத்திருக்கக் கூடாது
(ii) பதுளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 18,834,988 பெறுமதியான சத்திர சிகிச்சை மருத்துவ இருப்புக்கள் கொள்வனவின் போது எதிர்பார்த்த இடங்களுக்காக ஈடுபடுத்தாமல் சத்திர சிகிச்சை களஞ்சியத்தில் விளைவற்று இருந்தன	தவைப்பாடு காணப்படுகின்ற சுகாதார நிறுவனங்களை தேடி பகிர்ந்து அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	எதிர்பார்த்த நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும்

1.5.7 தலைப்பு 711- கல்வித் திணைக்களம்

(அ) முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	ஊவா மாகாண கல்வித் திணைக்களத்துக்குரிய 08 கல்வி வலயங்களுக்குரிய 35 உத்தியோகபூர்வ விடுதிகள் இறுதியாக 1988 மார்ச் 19 - 2019 ஜூலை 09 ஆம் திகதி காலப்பகுதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததால் நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை மீது சிக்கன வாடகை அறவிடு செய்யப்பட வில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் கல்வி 05 கல்வி வலயங்களுக்குரிய 144 உத்தியோகபூர்வ விடுதிகள் கணக்காய்வு திகதியான 2024 ஒக்தோபர் 18 ஆம் திகதி வரையில் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை,	உத்தியோகபூர்வ விடுதிகளை மதிப்பீடு செய்யும் தருமாறு 2024 திசெம்பர் 09 ஆம் திகதி பதுளை பிரதான மதிப்பீட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மொனறாகலை கல்வி வலயத்தில் ஆய்வுகூடம் ஒன்று இல்லாத மொ/முத்துகண்டிய 2 பியவர கனிஷ்ட வித்தியாலயத்திற்காக ஆய்வுகூட சேவை உத்தியோகத்தர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்தி 2024 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்காக சம்பளமாக ரூபா 575,370 தொகை செலுத்தப்பட்டிருந்தமை விளைவற்ற செலவினம் ஒன்றாக அவதானிக்கப்பட்டது.	திட்டவட்டமான நடை முறை ஒன்று இல்லாமல் முறையற்ற அடிப்படையின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டிருந்த தாகவும் பதவி பெயர் கருத்திற் கொள்ளப் ப்படமல் கடமை கையளிப்பு இடம் பெற்றுள்ளதாக மனிதவள	மனித வளப் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஆ) செயற்பாட்டு செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	இரண்டு மாணவர்கள் மாத்திரம் கற்கும் மொ’வெஹரபெந்திவத்த ஆரம்ப பாடசாலையில் கற்றல் நடவடிக்கைகளுக்காக இரண்டு ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுவதற்கு மேலதிகமாக 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு 2024 ஜனவரி முதல் ஒக்டோபர் வரை சம்பளமாக ரூபா 3,233,850 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	இப்பாடசாலை தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக அறிக்கை ஒன்றைத் தயாரித்து தருமாறு ஊவா மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக கல்வி அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டு இருந்தது.	தேவைப்பாடு இனங் காணப்பட்டு மனித வளங்கள் முகாமை செய்யப்பட வேண்டும்.
(ii)	ஆசிய அபிவிருத்தி உதவி திட்டத்தின் கீழ் இரண்டாம் நிலை கல்வி தரத்தை மேம்படுத்து வதற்காக இரண்டாம் கல்வி துறை அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் (SESIP) கீழ் அடையும் பொருட்கள் மற்றும் நுகர்வு பொருட்கள் 2022 ஜனவரி 05 ஆம் திகதி ரூபா 300,000 வீதம் பாடசாலைகளுக்கு வழங்கப் பட்டிருந்த பாடசாலை அடிப்படையிலான மானியங்களில் இருந்து மொத்தம் ரூபா 1,089,773 தொகையான மானியங்கள் தொடர்பாக தெரிவு பரிசோதனையின் போது பரீட்சிக்கப்பட்ட போது அதில் 08 பாடசாலைகளால் குறித்த கொள்வனவை மேற்கொள்ளாமல் பாடசாலை அபிவிருத்திக் கணக்கில் மானியங்கள் வருடக்கணக்காக விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.	பணத்தை பயன்படுத்துமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக	குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற் காக நிதிஏற்பாடு பயன்படுத்த வேண்டும்.
(iii)	கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரின் (கல்வி தர அபிவிருத்தி இ.அ) 2024 ஜூலை 01 ஆம் திகதிய ED/01/103/02/06(IV) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பாட அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 6,290,000 ஆன பாடசாலை அடிப்படையில்	பணத்தை பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்த பாடசாலைகளின் அதிபர் களுக்கு பணத்தை 2025 மே 31 இல் உள்ளவாறு பயன்படுத்தி செயன் முன்னேற்றத்தை வழங்கு மாறு அறிவிக்கப்பட்டுள்ள தாக	சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மானியமொன்று 2024 ஒக்டோபர் 31 ஆந் திகதி அளவில் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் 22 பாடசாலைகளில் மொத்தம் ரூபா 2,704,334 ஆன மானியங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டு இருந்தன		

(இ) பதவியணியினர் நிர்வாகம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஊவா மாகாணத்தில் முறையான ஆசிரிய சமப்படுத்தல் இடம் பெறாமை காரணமாக 2024 ஜூன் மாதம் இறுதியில் 08 கல்வி வலயங்களில் 605 பாடசாலைகளில் 2928 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக காணப்பட்ட பின்னணியில் 02 வலயங்களில் 145 பாடசாலைகளில் 338 ஆசிரியர்களின் மிகையொன்று பேணி செல்லப்பட்டு அம்மிகை பதவியணியினருக்கு 2023 ஜனவரி மாதம் முதல் 2024 ஜூன் மாதம் வரை மொத்தம் ரூபா 446,740,525 என சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 02 வலயங்களில் ஆசிரியர் மிகையொன்று காணப்பட்ட போதும் ஆசிரியர் சமப்படுத்தலொன்று இடம் பெறாமை காரணமாக 178 பாடசாலைகளில் 622 பேருக்கு பற்றாக்குறையொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் வகையில் இடமாற்றல் சபை கொள்கையின் பிரகாரம் சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக	முறைப்படி ஆசிரியர் சமப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ii)	மொனறாகல வலயக் கல்வி அலுவலகத்தில் பதவியணி தகவல்களின் பிரகாரம் 13 நூலக ஊழியர் பதவிகளும் 31 ஆய்வுக் கூட ஊழியர் பதவிகளும் மிகையாக அவதானிக்கப்பட்டதுடன் அம்மிகை பதவியணியின் 39 பேருக்காக 2024 ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரை சம்பளமாக ரூபா 21,990,799 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது	முறையற்ற அடிப்படையில் ஆட்சேக்கப்பட்டுள்ளதாக வும் திட்டவட்டமான இடமாற்ற கொள்கை ஒன்று இல்லை எனவும் அதிபர்களின கடமை கையழிப்பின் பிரகாரம் கடமைகளை மேற்கொள்வதாக	பதவியணி நிர்வாகம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்

1.5.8 தலைப்பு 712 - உள்ளூராட்சி திணைக்களம்

(அ) உள்ளூராட்சி அதிகார சபைகளை மேற்பார்வை செய்தல்

நிலுவை வருமானங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற் நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வீதவரி மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 905,889,335 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை .	கருத்து தெரிவிக்கவில்லை.	சட்டங்கள் மற்றம் உப விதிகளின் பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும்.
(ii)	1979 இன் 42 ஆம் இலக்க மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் (திருத்திய) சட்டத்தின் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129(2) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்க செலுத்த வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 187,446,243 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 619,981,105 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கவில்லை.	உரிய சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) வழங்கப்பட்டுள்ள மிகைக் கட்டண சான்றிதழ்களுக்காக அறவீடு செய்ய வேண்டியுள்ள பணம்

மீளய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோ கத்தர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்கள் தொடர்பாக ரூபா 4,357,522 அறவிட வேண்டியிருந்தது.	கருத்து தெரிவிக்கவில்லை.	உரிய சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.9 தலைப்பு 713 -கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

இகணக்காய்வ அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
மொனறாகலை மற்றம் பதுளை மாவட்டங்களில் பதிவினை பெற்றிருந்த 1500 கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையே 2025 சனவரி 01 ஆந் திகதி வரை செயற்பாட்டில் உள்ள 510 சங்கங்கள் அதாவது பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் 33 சதவீதம் மா்ததிரமாக இருந்தன. அதன் பிரகாரம் செயற்படாத சங்கங்களை செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்படாத சங்கங்களை கலைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக	முறையான செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5.10 தலைப்பு 714 –விவசாய திணைக்களம்

(அ) இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணக்கமின்மைகள்**	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரை**
நிதிப் பிரமாணம் 396	பதுளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தினால் வங்கி இணக்க கூற்று தயாரிக்கும் போது விநியோகிக்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த ரூபா 4,328,798 பெறுமதி யான 06 காசோலைகள் தொடர்பாக மாகாண சபை நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக	நிதி பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண விவசாய அமைச்சின் செயலாளரின் 2024 ஜனவரி 31 ஆம் திகதி 7/3/1/Annual plan/2024 ஆம் இலக்க கடிதத்தின் (2) ஆம் பந்தியின் பிரகாரம் விவசாய திணைக்களத்தின் மூலம் இதுவரை செயற்படுத்தப்பட்ட மற்றும் 2024 - ஆம் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நலனாலிகளின் விபரங்கள் உள்ளடக்கிய தரவு முறைமை ஒன்றை பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2024 ஒக்தேபர் 11 ஆந் திகதி வரையிலும் பதுளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தினால் அவ்வாறான முறைமையொன்று செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.	கணனி மயப்படுத்தப்பட்ட முறைமையொன்றைச் செயற்படுத்துவதற்கு விவசாய மதியுறை பிரிவுகளில் கணனி வசதிகள், மனித வளங்கள் உட்பட இணைய வசதிகள் இல்லை என்பதாக	முகாமைத்துவ அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(இ) செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) மொனறாகல மற்றும் பதுளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் மற்றும் 50 சதவீத விவசாயிகளின் பங்களிப்புத் தொகையில் கொள்வனவுக்கு திட்டமிடப்பட்டிருந்த உபகரணங்கள் மற்றும் விதை கொள்வனவு செய்யாமை காரணமாக அந்த விவசாயிகளுக்கு நலன்களை வழங்க முடியாதிருந்ததுடன் விவசாயிகளின் இடமிருந்து அறுவிடப்பட்ட 50 சதவீத பங்களிப்புத் தொகையில் ரூபா 1,036,440 தொகை விவசாயிகளுக்கு விடுவிக்கப்படாமல் பொது வைப்புக் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.	மொனறாகலைக்குரிய பதில் வழங்கப்படாதிருந்ததுடன் பதுளை அலுவலகத்தில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 612,276 ஆக இருந்தது.	உரிய காலப் பகுதியில் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) ஊவா மாகாண விவசாய திணைக் களத்தினால் உலக வங்கி மானியங்களின் கீழ் கிடைத்த நிதி ஏற்பாடுகளிலிருந்து 2023 ஆகஸ்ட் 23 ஆம் திகதி வரையில் ரூபா 14,369,186 தொகை செலவிடப்பட்டு பொரலந்த அரச கால்நடை பண்ணை வளவில் 20 மெற்றிக் தொன் இயலளவு உடைய வெங்காய விதை களஞ்சியம் ஒன்றும் 50 மெற்றிக் தொன் அளவிலான இயலளவிலான மேலதிக உணவு பயிர் விதைக் களஞ்சியம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2025 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் அக்களஞ்சியங்கள் விளைவற்று காணப்பட்டன.	பொரலந்த பிரதேசத்தில் பெரிய வெங்காயம் அல்லது மேலதிக உணவு பயிர்ச்செய்கை ஒன்று இடம்பெறவில்லை என்பதாகவும் எதிர்காலத்தில் இக் களஞ்சியங்களை கால்நடை பண்ணைக்கு கையளித செயற்பாடு ஒன்றுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக	சொத்துக்களை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும்

(ஈ) செயற்திட்டங்களை செயற்படுத்தாமை

தாமதமான செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
உணவு பாதுகாப்பு நிகழ்ச்சி திட்டத்திற்காக 2023 தடுசெம்பர் 12 ஆம் திகதி கிடைத்த ரூபா 50,000 தொகை 2023 ஜனவரி 16 ஆம் திகதி உள்நாட்டு உணவுச்சாலையின் மலசல கூடத்தை நிர்மாணிப்பதற்காக கிடைத்த ரூபா 1,190,338 ஆன பணத்தையும் குறித்த செயற்பாட்டை நிறைவேற்றாமல் பதுளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் பொது வைப்புக் கணக்கில் விளை வற்ற வகையில் வைத்திருக்கப்பட்டிருந்தது	பொது வைப்புக் கணக்கு தற்போது 02 ஆண்டுகளை கடந்துள்ளதால் அதை வருமானத்திற்கு எடுப்பதற்கு விவசாய பணிப்பாளர் இடமிருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக	நிதி ஏற்பாடுகளை உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும்

(உ) பதவியணியினர் நிர்வாகம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வெளிமட மற்றும் மஹியங்கன உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகங்களில் முறையே 09 மற்றும் 06 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவை புரிந்து வருவதுடன் அந்த உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக்காக அலுவலக உதவியாளர்கள் மற்றும் திணைக்கள தொழிலாளர்கள் முறையே 05 பேர் மற்றும் 06 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அந்த ஊழியர்களுக்கு 2023 ஆம் ஆண்டிலும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரையிலும் சம்பளமாக வெளிமட மற்றும் மஹியங்கன உதவி பணிப்பாளர் அலுவலகத்தினால் முறையே ரூபா 3,476,878 மற்றும் 5,172,739 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	வெளிமட அலுவலகத்தில் இருந்து பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை இரண்டு அலுவலக உதவியாளர்களின் இடமாற்றம் செயற்படுத்தாமல் இருந்தமை மற்றும் ஒருவர் இடமாற்றம் பெற்றுள்ள தாகவும் மஹியங்கன அலுவலகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டு இருந்தது	பதவி அணி நிர்வாகம் முறைப்படுத்தப்பட வேண்டும்

1.5.11 தலைப்பு 715 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் பொரலந்த கால்நடைப் பண்ணையில் மாகாண குறிப்பிட்ட மேம்பாட்டு மானியங்களைப் (PSDG) பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ், 2025 ஏப்ரல் 30, இல் உள்ளவாறு நிர்மாணத்திற்காக ரூபா 98,685,899 தொகையும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்காக ரூபா 12,807,376 செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2025 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் செயற்திட்ட வளாகத்திற்கு மின்சார இணைப்பைப் பெறத் தவறியதால் கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் செயலற்று இருந்தன.	விரைவில் எதிர்பார்த்த நோக்கங்ளுக்கு ஈடுபடுத்துவதாக	சொத்துக்களை எதிர்பார்த்த நோக்கங்ள் நிறைவேற்றப்படும் வகையில் ஈடுபடுத்த வேண்டும்.

1.5.12 தலைப்பு 718 – கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

(அ) இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண சபை நிதி விதிக் கோவையின் நிதி விதி 383	கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு 2020 நவம்பர் முதல் நவம்பர் 2024 வரை 02 கணக்கு களுக்கு உரியதாக செய்யப்பட்ட ரூபா. 2,007,237 நேரடி செலவு வைத்தல்களை கண்டறிந்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.	திணைக்களத்தின் கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் வங்கி இணக்கங்களில் குறிப்படப்பட் இனங் காணப்படாத பெறுவனவு மற்றும் தீர்வையாக பெறுவனவுகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.	ஊவா மாகாண சபை நிதி விதி 383 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் மிகப்பெரிய விற்பனை நிலையமாகவும் களஞ்சியமாகவும் இருந்த ஹால்பே நிலையத்தில் தெதரிவு அடிப்படையில் நடத்தப்பட்ட பௌதீக இருப்புச் சரிபார்ப்பின் போது, 1 ஆண்டு முதல் 3 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் விற்கப்படாத இருப்புகளின் பெறுமதி ரூபா. 5,350,479 ஆக இருந்தது.	விலைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு, விலையை நிர்ணயித்து விற்பனை செய்வதற்கான நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளதாக.	விற்பனை நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்பட வேண்டும்.

1.5.13 தலைப்பு 726 – பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்

செயற்திட்டங்களை செயற்படுத்தாமை

தாமதமான செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தினால் பதுளை ஸ்பிரிங்வெலி தமிழ் மஹா வித்தியாலயத்தில் 1600 சதுரஅடி கட்டிடமொன்றை நிர்மாணிப் பதற்காக 2025 பெப்ரவரி 25 ஆந் திகதி முதல் 2025 மார்ச் 04 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிஐந்த ரூபா 348,850 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	இந்த நிர்மாணத்தின் இறுதி பட்டியல் தற்போது கட்டிடத் திணைக் களத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. மேலும் பட்டியல் பரீட்சிக்கப்பட்டு வருகிறது. ஒப்பந்த காலம் 2025 ஜனவரி 01 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது, ஆனால் அந்தக் காலத்தை 2025 ஜனவரி 23, வரை நீடிக்க பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன, அதன் பிரகாரம் பட்டியல் செலுத்தப்படடும் போதும் தொடர்புடைய அபராதத்தை பட்டியலி லிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2017 ஆம் ஆண்டில், பண்டாரவளை, குடா குசும் பாலிகா வித்தியாலயத்தின் மூன்று மாடி மாணவர் விடுதியை நிர்மாணிப்ப தற்காக ஒரு தனியார் நீர்மாண நிறுவனமொன்றுடன் ரூபா. 47,093,234 பெறுமதியான ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தின் படி பணிகள் 2018 ஆகஸ்ட் 04 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிரமாணப் பணிகள் 2024 திசெம்பர் 06 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட வில்லை. நிர்மாணப் பணியின் மெதுவான வேகம் காரணமாக, மீதமுள்ள பணிகளுக்கான மதிப்பீடு 2023 ஆம் ஆண்டில் பண்டாரவளை பிராந்திய பொறியாளரால்	கருத்து தெரிவிக்க வில்லை.	உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தயாரிக்கப்பட்டு, அந்த மதிப்பீட்டின் கீழ் நிர்மாணத்தை முடிக்க முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. இருப்பினும், ஒப்பந்தக்காரரின் கால நீடிப்புகள் 09 சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்டன, மேலும் நீடிக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை 1908 ஆக இருந்த போதிலும், அந்தக் காலத்தைத் தாண்டி நிர்மாணத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒப்பந்தத்தின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா. 4,709,323 ஆக இருந்த போதும், புதிதாக தயாரிக்கப்பட்ட வேலை மதிப்பீடும் அதிகமாக செலவிடப்பட்டதுடன் மற்றும் தொடர்புடைய நிர்மாணக் கிரயம் ரூ.பா 53,530,572 ஆக இருந்தது

1.5.14 தலைப்பு 727 – ஊவா மாகாண வருமானத் திணைக்களம்

வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மூன்று அனுமதிப்பத்திரதாரர் களிடமிருந்து மொத்தம் ரூபா 1,165,006 ஆன கணிய வாடகை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை செலுத்துமாறு கடிதங்கள் மூலம் நினைவூட்டப்பட்டுள்ளதாக	அனைத்து நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ii)	1990 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி நியதிச்சட்டத்தின் X ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஊவா மாகாண சபையால் வசூலிக்கப்படும் அனைத்து முத்திரை வரிகளும், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) உப ˙பிரிவு 185(2)(ஆ), 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் மற்றும் உப பிரிவு 129(2)(ஆ) ஆகியவற்றின் படி, உள்ளூராட்சி நிதியின் வருமானமாக இருக்க வேண்டிய போதிலும் 2024	திருப்பிச் செலுத்தும் சட்டத்தின் விதிகளின் படி கோரப்படாத முத்திரை வரி விலக்குகள் மீண்டும் செய்யப்படாது, மேலும் கூடுதல் முத்திரை வரியிலிருந்து விலக்கு அளிக்க எந்த சட்டப்பூர்வ ஏற்பாடும் இல்லை. என்பதாக	உள்ளூர் அரசாங்க நிறுவனங்களின் வருமானம் முறையான முறையில் விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா. 220,295,157 பெறுமதியான முத்திரை வரிகள் மற்றும் கூடுதல் முத்திரை வரிகளை 28 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விடுவிக்க ஊவா மாகாண வருமானத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதேபோல், மாநகர சபை கட்டளைச் சட்டம், நகர சபை மற்றும் பிரதேச சபைச் சட்டங்களின் விதிகளின் பிரகாரம், காணி பரிமாற்ற முத்திரை வரி என்பது உள்ளூராட்சி நிறுவனங்களின் வருமானமாகும், மேலும் இது அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் 9 வது அட்டவணையின் 4:3 இன் படி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, 1993 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க முத்திரை வரிப் பிரிப்பு கட்டளைச் சட்டத்தின் படி, சேகரிக்கப்பட்ட முத்திரை வரி வருமானம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு திருப்பி விடப்பட வேண்டும், எனவே அத்தகைய வருமானம் மாகாண சபை வருமானம் அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய ரூபா 744,471,092 சொத்து பரிமாற்றத்தின் மீதான முத்திரை வரி வருமானம் மீளாய்வாண்டில் மாகாண சபையின் வருமானக் கணக்கில் காட்டப்பட்டதால், மாகாண சபையின் உண்மையான வருமானக் கணக்கில் பிரதிபலிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

1.5.15 தலைப்பு 731 – வீதி அபிவிருத்தி திணைக்களம்

செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்வகிகப்படும் 5 பிராந்திய பொறியியல் (வீதிகள்) அலுவலகங்களுக்கரிய 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆவணப்படுத்தப்பட்ட இருப்பு மற்றும் பௌதீக இருப்பு பரிசோதனையின் போது, ரூபா. 581,374 ஆன இருப்பு மிகையும், ரூபா 88,715 ஆன 4 இருப்பு பொருட்களுடன் தொடர்புடைய கையிருப்பு பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டன.	பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தால், மிகையாக உள்ள ,ருப்புக்களை கையிருப்பில் உள்ள ,ருப்பாகப் பயன்படுத்தவும், அவற்றுக்கு எந்த கட்டணமும் செலுத்த கூடாது எனவும், அலுவலக வளாகம் மற்றும் முன் முற்றங்களில் இருந்து ஆவணங்களில் உடப்படுத்தாத ,ருப்புக்களை அலுவலக வளாகத்தலிருந்தும் முன் கலவை தொகுதியிலிருந்தும் அகற்றுமாறு தொடர்புபட்ட வழங்குனர்களுக்குத் தெரிவிக்கவுமாறு பிராந்திய பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. பற்றாக்குறையாக உள்ள இருப்புகளில் சில பொருட்கள் பயன்படுத்தப் பட்டதாகவும், இனம் காணப்பட்ட பற்றாக் குறையை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.	முறைப்படி இருப்புக் கட்டுப்பாட்டு முறையொன்று பேணிச் செல்லப்பட வேண்டும்.

1.5.16 தலைப்பு 736 – பிரதிப் பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகம்

(அ) இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
நிதிப் பிரமாணம் 571	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2 ஆண்டு களுக்கும் மேலாக பணத்தை வைப்புச் செய்யப்பட்ட 15 நிறுவனங்களின் ரூபா 15,666,472 ஆன வைப்பு மீதிகள் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.	விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான மீதி ரூபா 319,866,322 ஆக இருந்ததுடன் மேலும் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும், நிலுவையில் உள்ள வருமானத்தில் காணி ஆணையாளர் நாயகத்தினாலால் வணிக அடிப்படையில் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்ட 348 குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா 199,250,189, தொகையும் நடுத்தர வகையான காணி குத்தகைக்கு வழங்கப்பட்ட 219 குத்தகை யாளர்களிடமிருந்து ரூபா 22,510,149	எதிர்காலத்தில் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	நிலுவைப பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தொகையும் வருடாந்த காணி குத்தகைகளுக்கு வழங்கப்பட்ட 91 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா. 3,026,371 தொகையுமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 224,786,709 தொகையில் சில வாடகை 30 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள குத்தகை வருமான தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக வாடகையை அறவிடுவது தொடர்பான ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் உள்ளிட்ட பிரதேச செயலகங்கள் பலவீனமான செயலாற்றல் மட்டமொன்றை காட்டுவது அவதானிக்கப்பட்டது

(இ) ஊவா மாகாண சபைக்கும் தனியார் கம்பனிக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுத்தப்படும் சூரிய மின்சக்தி முறைமை திட்டத்தின் பெறுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(i)	2024 நவம்பர் 24 ஆம் திகதிய பிரதி தலைமைச் செயலாளர் (நிதி) 2/PVC/ACP/06/Solar ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஊவா மாகாண சபை மூலம் ஊவா மாகாண சபைக்குச் சொந்தமான கட்டிடங்களின் கூரைகளைப் பயன்படுத்தி சூரிய சக்தியை உற்பத்தி செய்யும் திட்டத்தை பொது தனியார் பங்குடைமை (Public Private Partnership (PPP) திட்டமாகவும், ஏல ஆவணங்களின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு Turnkey திட்டமாகவும் ஊவா மாகாண சபை அறிவித்தது. அரசாங்க பெறுகை வழிகாட்டுதல்களின் 03.10 ஆம் பந்தியின் பிரகாரம் அத்தகைய பெறுகைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் தேவைப்பட்ட போதிலுலும், அத்தகைய அங்கீகாரம் பெறப்படவில்லை.	ஊவா மாகாண சபை மற்றும் இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது, தனியார் துறையுடன் இணைந்து, அரசு கட்டிடங்களின் கூரைகளில் தனியார் துறை முதலீடு செய்ததால், இந்தத் திட்டம் திட்ட முன்மொழிவுகளில் பொது-தனியார் பங்குடைமைமைத் திட்டமாகப் பெயரிடப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான சூரிய மின் பலகை அமைப்பின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் ஊவா மாகாண சபையின் தலையீடு இல்லாமல் தனியார் துறையால் Turnkey மேற் கொள்ள இருந்ததால், இது ஒரு ஆயத்த தயாரிப்புத் திட்டமாக அடையாளம் காணப்பட்டது. இந்தத்	ஏல ஆவணங்களில் இது ஒரு ஆயத்த Turnkey திட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், அதற்கேற்ப பொருத்தமான அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

		திட்டம் மாகாண நிதிக்குச் சொந்தமான கட்டிடங்களின் கூரைகளை வாடகைக்கு எடுப்பதால், மத்திய அரசிடமிருந்து அத்தகைய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.	
(ii)	மாகாண சபைகளின் தலைமை செயலாளர்களுக்கு வரையப்பட்ட 2019 மார்ச் 26 ஆந் திகதிய 02/2019 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அத்தகைய திட்டத்தை செயறபடுத்துவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (Cabinet Appointed Procurement Committee) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின (Technical Evaluation Committee) . அங்கீகாரம் தேவைப்பட்ட போதிலும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	மாகாண சபை நிதியத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் என்பதால், சூரிய மின் பலகைகளை நிறுவுவதற்கான சூரிய மின் பலகைகளை குத்தகைக்கு எடுப்பது, கௌரவ ஆளுநர் கலந்து கொண்ட கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நடவடிக்கைகள் அமைச்சரவைப் பத்திரம் மூலம் கௌரவ ஆளுநருக்கு அனுப்பப்பட்டு, பெறுகை குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமிப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டு, அதன்படி செயல்படுத்தல் நடந்துள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	பெறுகை ஆவணங்களின் Condition of Contract ஒப்பந்த நிபந்தனையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 2,500,000 செயலாற்றல் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று குறிபிடப்பட்டிருந்த போதிலும், திட்டத்தின் ஒப்பந்த பெறுமதியின் பிரகாரம் பெறப்பட்டிருக்க வேண்டிய செயலாற்றல் பிணையின் பெறுமதி ரூபா 292,822,562 ஆக இருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இற்குள் திட்டம் பூர்த்தி செய்யப்படவிருந்த போதிலும், அது அதன் பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், செயற் திட்டத்திற்கான கால நீடிப்பு கடிதங்கள் கணக்காய்விற்கு	சொத்துக்களை கையேற்பதற்கான கிரய மதிப்பீட்டின் பிரகாரம் இந்த பெறுமதி சரியானதாக இருந்ததுடன், மேலும் இது ஒரு சொத்தினை வாடகைக்கு வழங்குவது என்பதால் அளவுகளின் படி அதைப் பெற வேண்டிய அவசியமில்லை. பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம், ஒப்பந்தத்தின் செயலாற்றல் தோல்வியுற்றால் பெறுகை நிறுவனத்தை பாதுகாக்க ஒரு செயலாற்றல் பாதுகாப்பைப் பெறுவதே இதன் நோக்கமாகும். அதன் பிரகாரம் இந்த ஒப்பந்தகாரர்	பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், ஒப்பந்த நிறுவனம் ரூபா 2,500,000 செயலாற்றல் பாதுகாப்பு பிணையின் 2022 ஜூன் 22 ஆந் திகதி முதல் 2022 திசெம்பர் 22 வரை காலத்தை நீடித்துள்ளது. ஒப்பந்தத்தின் பிரகாரம் திட்டம் முடிக்கப்படவில்லை அல்லது காலம் நீடிக்கப்படாததுடன் மற்றும் செயலாற்றல் பத்திரம் பணமாக்கப்படவில்லை. அத்தோடு, ஒப்பந்ததாரருடன் கையெழுத்திட்ட உடன்படிக்கையில் செயலாற்றல் பிணை தொடர்பில் உத்தரவாதம் தொடர்பான எந்த பிரிவும் இல்லை.	தனது செயலாற்றல தோல்வியுற்றால், அந்த காலகட்டத்தில் மற்றொரு ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுப்பதற்கான செலவு மற்றும் திட்டத்தை பராமரிப்பதற்கான செலவு போதுமானதாக இருக்கும். மேலும், அதிக செயலாற்றல் பாதுகாப்பு கோரப்பட்டால், அது ஏலதாரரால் முதலீடு செய்யப்படுவதால், அது அவரது திரவத்தன்மையை பாதிக்கும், மேலும் இது ஏல விலையை குறைப்பதற்கு தாக்கமளிக்கும்	
(iv)	செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கையின் 6(xvi) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து 12 மாதங்களுக்குள் 46.35 மெகாவாட் ,யலளவு கொண்ட சூரிய மின் பலகைகள் நிறுவப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிரும் 2024 நவம்பர் 30, ,ல் உள்ளவாறு , ஒப்பந்தம் செய்யப்பட்ட 879 கூரைகளில் 450 கூரைகளில் மட்டுமே சூரிய மின் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன, மேலும் அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் 20 மெகாவாட் ஆக ,ருந்தது. அதன் பிரகாரம், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இந்தத் திட்டத்திலிருந்து ஊவா மாகாண சபைக்கு வர வேண்டிய வருமானம் சுமார் ரூபா 73,258,680 அளவில் கிடைக்காமல் போயிருந்தது.	இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நேரத்தில், சூரிய மின் தகடுகள் பொருத்துவதற்கு பொதுவாக ஒரு வருட காலம் வழங்கப்பட்ட போதிலும், இலங்கை மின்சார சபையுடனான கலந்துரையாடலின் போது, இவ்வளவு திறன் கொண்ட ஒரு திட்டத்தை ஒரு வருடத்திற்குள் முடிப்பது சவாலானது என்பது அவதானிக்கப்பட்டது. 2021 கோவிட் தொற்றுநோய் காரணமாக சூரிய மின் தகடுகளை இறக்குமதி செய்ய இயலாமை, 2022 இல் பொருளாதார நிலைமை மற்றும் இலங்கை மின்சார சபையில் உபகரணங்களின் பற்றாக்குறை போன்ற காரணிகளால் இந்த திட்டத்தை எதிர்பார்த்த காலத்திற்குள் செயல்படுத்த முடியவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.	உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	செயற் திட்டம் தொடர்பாக கூட்டுக் கணக்கில் பெறப்பட்ட வருமானத்திலிருந்து மாகாண	இந்த நிலைமை இனங் காணப்பட்டு, இந்த பணத்தை	விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை

	சபைக்கு வர வேண்டிய 15.2 சதவீத வருமானம் ரூபா. 105,440,631 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அதில் ரூபா. 104,868,224 தொகை மாத்திரமே தொடர்புடைய சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்ததால், ரூபா. 572,407 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	எடுக்கப்பட வேண்டும்.
(vi)	ஊவா மாகாண தலைமைச் செயலாளரிடமிருந்து, 2021 ஒக்டோபர் 07 ஆந் திகதிய 2/UPC/ACP/06 ஆம் இலக்க கடிதம் மூலம்திட்ட அமுலாக்கப் பிரிவுக்கு மாதாந்த கொடுப்பனவுகளை வழங்குவதற்காக, ஆளுநரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம், 2021 நவம்பர் 03 முதல் 2024 நவம்பர் 29 வரை 14 உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 7,359,784 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.. மாகாண தலைமைச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட 2018 ஜுலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 2018 ஜுன் 19, ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட முடிவில், அத்தகைய கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்பு திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று குறிப்பட்டிருந்த போதும், அதைக் கருத்தில் கொள்ளாமல், ஆளுநரின் அங்கீகாரத்துடன் பணம் செலுத்தப்பட்டது. மேலும், ஆளுநரின் அங்கீகாரத்தைக் கோரும் கடிதத்தின் பிரகாரம் இந்த கொடுப்பனவுகள் கம்பனியால் செலுத்தப்படும் என்று கூறப்பட்டிருந்த போதிலும், இது ஏல ஆவணங்களிலும்	விசேடமாக மாகாண சபைக்குள்அடையாளம் காணப்பட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்துவதில் 03/2018 சுற்றறிக்கையின் விதிகள் தடையாக இல்லை என்றும், வழிநடத்தல் குழு கூட்டத்தில் இணக்கப் பாட்டின் பேரில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட முறையான கோரிக்கையின் பிரகாரம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பணத்திலிருந்து ஆளுநரின் அங்கீகாரத்துடன் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.	கம்பனி பஒ்பந்தத்தின் விதிமுறைகளை மீறிய போதிலும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிறுவனம் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளதால், சுற்றறிக்கை அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

ஒப்பந்தத்திலும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.
அவ்வாறே 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.4.4 இன் பிரகரம் பெறுகை செயற்பாட்டிற்கு சமூகமளிக்கும் எந்தவொரு உத்தியோகத்தரும் ஏதேனும் தனிப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளக் கூடாத போதும் பெறுகை செயற்பாடுகளுக்கு நேரடிய பங்களித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை குழவின் 07 உத்தியோகத்தர்கள் இப்படிகளை பெற்றுக் கொண்டிருந்தனர்.
அவ்வாறே 2023 இன் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் 97 ஆம் பிரிவின் பிரகாரம் இப்படிகளை வழங்குதல் அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் இலஞ்சமொன்றென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) ஏனைய முற்பண கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களின் இடமாற்றம் செய்யப்பட்ட,, மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற, பணிநீக்கம் செய்யப்பட்ட மற்றும் பதவியை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 37,111,064 நிலுவைத் தொகை தொடர்பாக தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2019 ஜுன் 27 ஆம் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03(அ),(ஆ),(இ), இன் ஏற்படுகளின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதேபோல், ஊவா மாகாண சபையின் 08 நிறுவனங்கள் தொடர்பான இனங் காணப்படாத ரூபா 1,010,846 நிலுவைத் தொகை நிதி	இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து நிலுவையில் உள்ள கடன்களை அறவிடுவதற்கு நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு கலந்துரை யாடப்பட்டுள்ளதுடன். ஓய்வூ பெற்ற உத்தி யோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை தீர்வுசெய்வதற்கு ஓய்வூதிய திணைக்களத்தின் திரவப் பிரச்சினையால் தீர்வு செய்வதில் தாமதமாகியுள்ள தாகவும் இறந்த மற்றும் ஓசேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமின்கட	அனைத்து கடன்களையும் அறவீடு செய்தல் வேண்டும்.

அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வவண்டின் இறுதி வரை அதைத் தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	ன்களைத் தீர்க்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக.	

(ஈ) தீர்வு செய்ய வேண்டிய மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஊவா மாகாண சபையின் 09 அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்ற வந்த உத்தியோகத்தர்களின் ரூபா . 29,874,528 ஆன கடன் மீதிகள் தீர்க்கப்படவில்லை. அதேபோல், மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 05 நிறுவனங்களுடன் தொடர்புடைய ரூபா. 9,335,891 ஆன இனங் காணப்படாத கடன்கொடுத்தோர் மீதி இருந்தது, மேலும் மீளாய்வாண்டின் இறுதி அளவில் அதைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	இதில் ஏனைய மாகாண சபைகள், மத்திய அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளும் அடங்கும். இந்த நிலுவை தொகைகள் தற்போது படிப்படியாக தீர்க்கப்பட்டு வருகின்றன.	அனைத்து கடன்களையும் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

(அ) நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 1,840,666,085 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,943,894,409 ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் பற்றாக்குறை ரூபா 1,103,228,414 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) வருமானம் மற்றும் செலவு முரண்கள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான பொழிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

வருமானம்

	2024 உள்ளவாறான ரூபா	2023 உள்ளவாறான ரூபா	முரண் ரூபா
மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானங்கள்			
வரி வருமானம்	2,342,334,896	1,880,523,416	461,811,480
வரியற்ற வருமானம்	961,318,722	737,383,636	223,935,086
அரசாங்க மானியம்	38,995,747,682	33,203,977,046	5,791,770,636
மொத்தம்	42,299,401,300	35,821,884,098	6,477,517,202

செலவுகள்

	2024 உள்ளவாறான ரூபா	2023 உள்ளவாறான ரூபா	முரண் ரூபா
மீண்டுவரும் செலவுகள்			
ஆளணிக்கான வேதனங்கள்	30,166,448,329	26,346,038,860	3,820,409,469
ஏனைய மீண்டுவருபவை	12,222,454,566	11,380,202,817	842,251,749
உபமொத்தம்	42,388,902,895	37,726,241,677	4,662,661,218
மீண்டுவரும் தன்மையான அபிவிருத்தி செலவுகள்	1,751,164,490	1,039,536,919	711,627,571
மொத்தம்	44,140,067,385	38,765,778,596	5,374,288,789
(பற்றாக்குறை)	**(1,840,666,085)**	**(2,943,894,498)**	**1,103,228,413**

	ரூபா
மீண்டுவரும் தன்மையான அபிவிருத்திச் செலவுகள்	1,751,164,490
நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுகின்ற மூலதனமாக்கப்படுகின்ற செலவுகள்	2,302,615,710
அரசாங்க முதலீடுகள்	**4,053,780,200**

மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 42,299,401,390 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 38,995,747,682 அதாவது 92.19 சதவீத அரசாங்கத்தின் மானியமாகும். வரி வருமானம் ரூபா 2,342,334,896 அதாவது மொத்த வருமானத்தில் 5.53 சதவீதமும் வரியல்லாத வருமானம் ரூபா 961,318722 அதாவது மொத்த வருதமானத்தில் 2.27 சதவீதமாக இருந்தது. ஆண்டிற்கான மொத்த வருமானமாகிய ரூபா 42,299,401,300 இல் மீண்டுவரும் செலவுகளுக்காக (பெறுமானத் தேய்வினைத் தவிர்த்து) ரூபா 37,431,477,951 அதாவது 88.49 சதவீதமும் அரசாங்க முதலீட்டிற்காக ரூபா 4,053,780,200 அதாவது 9.58 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

(அ) அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி நிகழ்சித்திட்டத்திற்காக கிடைத்த நிதி ஏற்பாடு மற்றும் அவற்றினைப் பயன்படுத்துதல் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

மூலம்	அங்கீகரித்த தொகை ரூபா	செலவு செய்த தொகை ரூபா	குறைந்த பயன்பாடு ரூபா
பருமனளவு அடிப்படையிலான மானியம்	35,880,020,000	35,170,275,000	709,745,000
திட்டவட்ட மானியம்	616,000,000	462,000,000	154,000,000
மாகாண விடயத்தை குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம்	3,169,000,000	2,376,750,000	792,250,000
உலக வங்கி உதவிகள்			
- விசேட பிரிவு அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (கல்வி)	560,000,000	560,000,000	-
- விசேட பிரிவு செயற்திட்ட மானியம் (சுகாதாரம்)	400,000,000	400,000,000	-
மொத்தம்	40,625,020,000	38,969,025,000	1,655,995,000

ஊவா மாகாண சபையின் அபிவிருத்திப் வேலை முன்மொழிவுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 40,625,020,000 ஆக இருந்தும், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கட்டுநிதி ரூபா 38,969,025,000 ஆகும். அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கு வழங்கப்படாத கட்டுநிதி ரூபா 1,655,995,000 ஆக இருந்தது.

(ஆ) மாகாண அபிவிருத்தி திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் தொடர்ச்சியான வேலைகளுக்காக ரூபா 4,112 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 2797 செயற்திட்ட பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட வேலைப் பிரேரணைகளின் செயல்முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

மூலம்	**புதிய வேலைகள்**	**தொடர்ச்சி யான வேலைகள்**	**மொத்த வேலைகள்**	**மொத்த வேலைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி**
				ரூபா
முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டவை	2626	18	2644	4,112,079,368
50% இனைவிட அதிகமாக பூர்த்திசெய்தவை	37	07	44	
50% இனை விட குறைவாக பூர்த்திசெய்தவை	34	0	34	
ஆரம்பிக்கப்படாதவை	73	0	73	
சச்சரவுத் தன்மை/ பிரச்சினை நிலையின் கீழுள்ளவை	02	-	02	
மொத்தம்	2772	25	2797	